தொடக்கப் பள்ளி

ஐந்தாம் வகுப்பு
தொடர் மதிப்பீட்டுத் தேர்வு

Primary School
Primary 5 – Continual Assessment
Tamil Language Paper 2

Name பெயர் : ____________ ( )
Class வகுப்பு: 5 / ____
(Form Class)
Date தேதி : ____________ Marks:

**Booklet A**

23 கேள்விகள்
46 மதிப்பெண்கள்

Total Time : 1 h 40 min
மொத்த நேரம்: 1 h 40 min

DO NOT OPEN THIS BOOKLET UNTIL YOU ARE TOLD TO DO SO.
FOLLOW ALL INSTRUCTIONS CAREFULLY.
ANSWER ALL THE QUESTIONS.

THIS BOOKLET CONTAINS 8 PAGES.

ஆசிரியர் கூறும் வரை தேர்வுத்தாளைத் திருப்பக்கூடாது.
விளக்கங்களைக் கவனமாகப் படிக்கவும்.
எல்லாக் கேள்விகளுக்கும் பதில் அளிக்கவும்.

பெற்றோர் கையொப்பம்:
Parent's Signature : ____________




www.testpapersfree.com

P 5

தேர்வுத்தாள் - 4

<u>வினா 2</u>

பின்வரும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு, 90 <u>சொற்களுக்குக் குறையாமல்</u> ஒரு கட்டுரை / கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை / கதை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.




1. உடல் நலமில்லை
2. சோதித்துப் பார்த்து
3. மருத்துவ விடுப்பு
4. ஓய்வு எடுத்தான்
5. வீட்டுப்பாடம்
6. காய்கறிகள் வாங்குவதற்கு
7. கவனித்துக்கொள்ளும்படி
8. கதையைப் படித்துக்காட்டி



www.testpapersfree.com

P5

CA- 1

தேர்வுத்தாள் - 4

A1 வேற்றுமை

*Q1 முதல் Q6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)*

ஒரு சமயம் முல்லா கனவு கண்டார். கனவில் நீண்ட *(Q1)* பெரியவர் ஒருவர் தோன்றினார். அவர் *(Q2)* பார்த்து, ``நீ வறுமையில் வாடுகிறாய் என்பது எனக்குத் தெரியும். எனவே, என் கையில் உள்ள *(Q3)* சில பொற்காசுகளை உனக்கு அன்பளிப்பாகத் தருகிறேன்``, என்றார். பிறகு அவர் முல்லாவிடம் ஒன்பது *(Q4)* கொடுத்தார். உடனே முல்லா, *(Q5)* ஒன்பது பொற்காசுகள் போதாது என்றார். கண் விழித்துப் பார்த்தபோது முல்லா ஏமாற்றம் அடைந்தார். அவர் *(Q6)* ஒரு பொற்காசும் இல்லை. உடனே, கண்களை மூடிக்கொண்டு, ``பெரியவரே எனக்கு ஒன்பது பொற்காசுகள் போதும்,`` என்றார்!

*(ஆதாரம்: மாணவர் முரசு 04/07/2005)*

**Q1.**
(1) தாடிக்கு
(2) தாடியுடன்
(3) தாடியில்
(4) தாடியை ( )

**Q2.**
(1) முல்லாவை
(2) முல்லாவிடமிருந்து
(3) முல்லாவுக்கு
(4) முல்லாவின் ( )

**Q3.**
(1) பண முடிப்புக்கு
(2) பண முடிப்போடு
(3) பண முடிப்பில்
(4) பண முடிப்பிலிருந்து ( )

**Q4.**
(1) பொற்காசுகளுடன்
(2) பொற்காசுகளில்
(3) பொற்காசுகளை
(4) பொற்காசுகளால் ( )

**Q5.**
(1) தன்னிடம்
(2) தனக்கு
(3) தன்னால்
(4) தன்னிடமிருந்து ( )

**Q6.**
(1) கையின்
(2) கையில்
(3) கையுடன்
(4) கையோடு ( )

(அடுத்த பக்கம் பார்க்க)



56

www.testpapersfree.com

A2 செய்யுள் / பழமொழி

*Q7 முதல் Q12 வரையுள்ள செய்யுள் / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.* *(12 மதிப்பெண்கள்)*

*Q7.* அன்பிருந்தால் ________________ ஆகும்.

(1) எல்லாம்
(2) ஆகாததும்
(3) ஆனதும்
(4) அனைத்தும் ( )

*Q8.* அளவுக்கு ________________ அமுதமும் நஞ்சு.

(1) மிஞ்சினால்
(2) மீறினால்
(3) சாப்பிட்டால்
(4) உண்டால் ( )

*Q9.* மந்திரிக்கு அழகு வரும்பொருள் ________________ .

(1) அடங்கல்
(2) தேடல்
(3) சேமித்தல்
(4) உரைத்தல் ( )

*Q10.* மகன்தந்தைக்கு ஆற்றும் ________________ இவன்தந்தை என்நோற்றான் கொல்எனுஞ் சொல்.

(1) சேவை
(2) கல்வி
(3) உதவி
(4) அன்பு ( )

*Q11.* ____________ ஆயிரம் பொன் தரும்.

(1) பொறுமை
(2) ஒழுக்கம்
(3) அடக்கம்
(4) விவேகம் ( )

*Q12.* ____________ உண்டு வாழ்வு.

(1) ஒற்றுமையால்
(2) ஒன்றுபட்டால்
(3) இளமையில்
(4) கூடி வாழ்ந்தால் ( )

(அடுத்த பக்கம் பார்க்க)



5

www.testpapersfree.com

B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்

*பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி.*

பசுமலை என்ற ஓர் அழகான சிறிய கிராமத்தில் மக்கள் நேர்மையாகவும், கடுமையாகவும் உழைத்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். அவ்வூரில் பசுபதி என்ற பெரியவர் வாழ்ந்து வந்தார். அவர் நேர்மையே வடிவானவர். அவர் ஊரிலுள்ள வழக்குகளை நன்றாக *ஆராய்ந்து* சரியாக நீதி வழங்குவார். அதனால், அவ்வூர் மக்கள் அவரை ஊர்த்தலைவராக நியமனம் செய்தனர்.

நேர்மையான குணமுடைய பசுபதிக்கு மாணிக்கம் என்ற ஒரு மகன் இருந்தான். அவன் தீய நண்பர்களுடன் சேர்ந்துகொண்டு பசுபதியின் சொத்துகளை அழித்து வந்தான். பசுபதியால் தன் மகனைத் திருத்த முயற்சிகள் பல மேற்கொண்டும், அவரது மகன் திருந்திய பாடில்லை. ஒருநாள், ஞானி ஒருவர் பசுபதியின் நேர்மையைக் கேள்விப்பட்டு அவருக்கு ஓர் அதிசய முத்துமாலையைப் பரிசாகக் கொடுத்தார். அந்த முத்துமாலையை அணிந்துகொண்டால் முதல்நாள் நடந்த செயல்களை முத்துமாலை படம் பிடித்துக் காட்டிவிடும். இந்த முத்துமாலையை அணிந்துகொண்டு மகனது தீய செயல்களைத் தெரிந்துகொள்ள பசுபதி விரும்பினார்.

ஒரு முறை பசுபதியைத் தேடிக்கொண்டு ஒருவர் வந்தார். ``ஐயா! நேற்று என் வீட்டிலிருந்த நகைகள் களவாடிப்போய்விட்டன. நீங்கள் தான் திருடனைக் கண்டுபிடித்துத் தர வேண்டும்,`` என்று *கெஞ்சினார்.* பசுபதி அவரைச் சமாதானம் செய்து, வீட்டுக்கு அனுப்பி வைத்தார். மறுநாள் காலை அவர் வழக்கம் போல் முத்துமாலையை அணிந்துகொண்டார். அப்போது அவர் மகன், தன்னுடைய நண்பர்களுடன் சேர்ந்து நகைகளைத் திருடிச் சென்ற சம்பவத்தை முத்துமாலை படம் பிடித்துக் காட்டியது. இதை அறிந்த பசுபதி மனம் *வருந்தினார்.* தான் செய்த தவற்றைத் தந்தை அறிந்துகொண்டார் என்று மாணிக்கம் உணர்ந்தான். இருப்பினும் அவன் மனம் வருந்தவில்லை.

பசுபதி தன் மகனை வழக்குகள் நடக்கும் இடத்திற்கு வரச் சொன்னார். தந்தை தனக்குச் சாதகமாகப் பதில் கூறுவார் என்று மகன் எண்ணினான். ``நகைகளைத் திருடியது மாணிக்கம் என்று நிரூபிக்கப்பட்டதால், அவன் நகையின் சொந்தக்காரரின் வீட்டில் ஏழு ஆண்டுகள் நேர்மையாகவும் இலவசமாகவும் வேலை செய்ய வேண்டும்,`` என்று தீர்ப்பு அளித்தார். இதனைக் கேட்ட மாணிக்கம் அதிர்ந்து நின்றான்.

*(ஆதாரம்: மாணவர் முரசு 11/10/2004)*

(அடுத்த பக்கம் பார்க்க)



www.testpapersfree.com

*Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர்,, OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.*

*(10 மதிப்பெண்கள்)*

*Q13.* மக்கள் ஏன் பசுபதியை ஊர்த் தலைவராக நியமித்தனர்?

(1) அவர் வழக்குகளை விசாரித்ததால்
(2) அவர் நியாயமாக நீதி வழங்கியதால்
(3) அவர் கடுமையாக உழைத்ததால்
(4) ஊரில் வேறு தலைவர்கள் கிடைக்காததால் ( )

*Q14.* முத்துமாலையின் தன்மை என்ன?

(1) முத்துமாலையால் திருடனை அடையாளம் காட்ட இயலும்
(2) முத்துமாலையைக்கொண்டு நீதி வழங்கலாம்
(3) முத்துமாலை நடக்கவிருக்கும் செயல்களைப் படம் பிடித்துக்காட்டும்
(4) முத்துமாலை முதல் நாள் நடந்த சம்பவங்களைப் படம் பிடித்துக்காட்டும் ( )

*Q15.* மாணிக்கம் செய்த தவறு என்ன?

(1) பசுபதியின் மகனாகப் பிறந்தது
(2) தந்தையின் முத்துமாலையைத் திருடியது
(3) பிறர் நகைகளைத் திருடியது
(4) தீய நண்பர்களோடு சகவாசம் வைத்துக்கொண்டது ( )

*Q16.* மாணிக்கம் ஏன் அஞ்சவில்லை?

(1) தான் அந்த நகையைத் திருடவில்லை என நம்பியதால்
(2) தந்தை தவற்றை ஒப்புக்கொள்ளாததால்
(3) தீர்ப்பைப் பசுபதியே வழங்க இருந்ததால்
(4) தந்தை வழக்கை மாற்றிவிடுவார் என கருதியதால் ( )

*Q17.* மாணிக்கம் எவ்வாறு தண்டிக்கப்பட்டான்?

(1) ஏழு ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கப்பட்டதன் மூலம்
(2) நகை சொந்தக்காரரின் வீட்டில் வேலை அளிக்கப்பட்டதன் மூலம்
(3) அவனைப் பசுபதி நகை சொந்தக்காரருக்குத் தத்து கொடுத்து விட்டதன் மூலம்
(4) மாணிக்கம் ஏழு ஆண்டுகள் நகை சொந்தக்காரரின் வீட்டில் ஊதியமின்றி நேர்மையாக பணியாற்ற வேண்டியதன் மூலம் ( )

(அடுத்த பக்கம் பார்க்க)



5C

www.testpapersfree.com

B4 சொற்பொருள்

*Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.*

*(6 மதிப்பெண்கள்)*

*Q18.* ஆராய்ந்து
(1) யோசித்து
(2) ஈடுபட்டு
(3) கவனித்து
(4) சுவாசித்து
( )

*Q19.* கெஞ்சினார்
(1) கதறினார்
(2) ஏசினார்
(3) மன்றாடினார்
(4) கலங்கினார்
( )

*Q20.* வருந்தினார்
(1) நாணினார்
(2) உருகினார்
(3) வெம்பினார்
(4) உடைந்தார்
( )

(அடுத்த பக்கம் பார்க்க)



www.testpapersfree.com

B5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்

*பின்வரும் விளம்பரத்தை கருத்தூன்றிப் படி:*

## வள்ளுவர் தொடக்கப் பள்ளித் தமிழ் மன்றம்

பெருமையுடன் படைக்கும்

## தலைக்கோவை

நிகழ்ச்சி நிரல்

நாள் : 27-2-2005 நேரம் : பிற்பகல் 3.00 மணி

இடம் : பள்ளி மண்டபம்

3.00 இறை வணக்கம் - பள்ளிப் பாடகர் குழு

3.10 தலைவர் உரை - மன்றத் தலைவர்

3.20 தமிழ் வாழ்த்துப் பாடல் -
செல்வன் மலர்வேந்தன்

3.30 சொற்பொழிவு (திருக்குறள்) - திரு. அகத்தியர்

4.00 பரத நாட்டியம் - குமாரி கலையரசி

4.15 நாடகம் - `மானம் காத்த மன்னன்`
- மன்ற உறுப்பினர்

4.30 பரிசளிப்பு - பள்ளி முதல்வர்

4.50 நன்றியுரை - மன்றச் செயலாளர்

5.00 நிறைவு

(அடுத்த பக்கம் பார்க்க)



www.testpapersfree.com

*Q21 முதல் Q23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.* *(6 மதிப்பெண்கள்)*

*Q21.* யார் கதம்ப நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்கள்?

(1) வள்ளுவர் தொடக்கப் பள்ளி மாணவர்கள்

(2) வள்ளுவர் தொடக்கப் பள்ளி தமிழ் மன்ற செயலாளர்

(3) வள்ளுவர் தொடக்கப் பள்ளி தமிழ் மன்றக் குழுவினர்கள்

(4) வள்ளுவர் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் ( )

*Q22.* மன்ற உறுப்பினர்கள் என்ன படைக்கிறார்கள்?

(1) நாடகத்தை

(2) பரத நாட்டியத்தை

(3) தமிழ் வாழ்த்துப் பாடலை

(4) இறை வணக்கத்தை ( )

*Q23.* உரையைத் தவிர்த்து, மாணவர்கள் எத்தனை படைப்புகளைப் படைக்கிறார்கள்?

(1) இரண்டு

(2) மூன்று

(3) நான்கு

(4) ஐந்து ( )

(அடுத்த வினாப் புத்தகத்தைப் பார்க்க)



www.testpapersfree.com

## " ஆ " பிரிவு

**C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்**

பின்வரும் பகுதியில் *Q24* முதல் *Q28* வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. *(10 மதிப்பெண்கள்)*

| | | |
|---|---|---|
| *Q24.* | நோய்வாய்ப் பட்டிருந்த தந்தையைக் காண மகன்கள் இருவரும் வந்திருந்தனர். அவர் தம் சொத்து முழுவதையும் தன் இரண்டு மகன்களுக்கும் __________ பங்காகப் பிரித்துக் கொடுத்தார். | *Q24.* (    ) |
| *Q25.* | அம்மா சந்தைக்குச் சென்று மீன் வாங்கி வந்தார். அவர் சமைத்த மீன் __________ என் மூக்கைத் துளைத்தது. | *Q25.* (    ) |
| *Q26.* | பள்ளி ஓட்டப்பந்தயப் போட்டி நாளை தொடங்கவிருக்கிறது. சிறப்பு விருந்தினராக என் __________ தலைமை ஆசிரியர் வருகை புரிகிறார். | *Q26.* (    ) |
| *Q27.* | இடைவேளையின்போது மாணவர்கள் திடலில் மலைப்பாம்பு ஒன்றைக் கண்டனர். அதன் __________ சுமார் பத்து மீட்டர். | *Q27.* (    ) |
| *Q28.* | திருடன் __________ வயது நிரம்பிய மூதாட்டியின் பணப்பையை அபகரித்து ஓடிவிட்டான். நல்ல வேளையாக வழிப்போக்கர்கள் சிலர் அவனைக் கையும் களவுமாகப் பிடித்தனர். | *Q28.* (    ) |

| | |
|---|---|
| (1) முன்னால் | (2) எண்பது |
| (3) அரை | (4) நீலம் |
| (5) கறி | (6) முன்னாள் |
| (7) நீளம் | (8) என்பது |
| (9) அறை | (10) கரி |

(அடுத்த பக்கம் பார்க்க



63

www.testpapersfree.com

**D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

*பின்வரும் பகுதியில் Q29 முதல் Q35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.*

*(14 மதிப்பெண்கள்)*

| | |
|---|---|
| அன்று லலிதாவின் பத்தாவது பிறந்தநாள். அவளுடைய அம்மா அவளுக்குத் தங்கக் காதணிகள் வாங்கிக் கொடுக்க (Q29). அவர் லலிதாவை ஒரு நகைக்கடைக்கு அழைத்துச் சென்றார். | Q29 ( ) |
| அங்குப் பல வடிவங்களில் காதணிகள் இருந்தன. அவை லலிதாவின் கண்களை (Q30). லலிதா, நீண்ட நேரம் காதணிகளை அலசி ஆராய்ந்துகொண்டிருந்தாள். அவள் எதைத் தேர்ந்தெடுக்கலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தாள். சிறிது நேரம் கழித்து அவளது அம்மா அவளுக்கு (Q31) காதணிகளைத் தேர்ந்தெடுத்தார். வாங்கிய மறுகணமே லலிதாவுக்கு அவற்றை உடனே (Q32) வேண்டும் என்று விரும்பினாள். ஆனால் லலிதாவின் தாயார், வீட்டிற்குச் சென்றவுடன் அவற்றை அணியலாம் என்று (Q33) கூறி விட்டார். | Q30 ( )<br>Q31 ( )<br>Q32 ( )<br>Q33 ( ) |
| இருவரும் வாடகை உந்துவண்டியில் ஏறி வீடு திரும்பினார்கள். வீட்டை (Q34) லலிதா தன் தாயாரிடம் காதணிகளைக் கேட்டாள். அவர் தன் கைப்பையைத் திறந்தார். "ஐயோ! காதணிகள் அதில் இல்லையே!", என்று லலிதாவின் அம்மா அலறினார். லலிதாவுக்கு ஒன்றும் புரியவில்லை. லலிதாவின் தாயார் காதணிகளை வாடகை உந்துவண்டியிலேயே தவறவிட்டுவிட்டதை அப்போதுதான் உணர்ந்தார். | Q34 ( ) |
| லலிதாவின் தாயார் உடனே தன் கணவரைத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டார். லலிதாவின் தந்தை (Q35) வாடகை உந்துவண்டி நிலையத்திதை அழைத்தார். பாவம் லலிதா! பிறந்தநாள் அன்று அவள் ஏமாந்து போனாள். | Q35 ( ) |

| | | |
|---|---|---|
| 1. கண்டிப்பாக | 2. நெருங்கியதும் | 3. விரும்பினார் |
| 4. ஜொலித்தன | 5. தாமதித்தாமல் | 6. பிடித்தமான |
| 7. கவர்ச்சியான | 8. பறித்தன | 9. அலங்கரிக்க |
| 10. அணிய | 11. கடுகடுப்பாக | 12. அடைந்ததும் |

அடுத்த பக்கம் பார்க்க



www.testpapersfree.com

*D8* சுயவிடைக் கருத்தறிதல்

*பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.*

ஓர் ஊரில் கிருஷ்ணன் என்ற நேர்மையான மனிதர் வசித்து வந்தார். அவருக்கு செந்தில், வேலவன் என்ற இரு புதல்வர்கள் இருந்தனர். பெரியவன் செந்தில் தகப்பன் போலவே நேர்மையும் அடக்கமும் நிறைந்தவன்.வேலவனோ மூர்க்க குணமும் ஏமாற்றுப் புத்தியும் நிறைந்தவன். வேலவனுக்கு அவன் தந்தை எவ்வளவு அறிவுறுத்தியும் அவன் திருந்துவதாய் இல்லை.

ஒரு முறை கிருஷ்ணன் வெளியூருக்குச் செல்ல வேண்டியிருந்தது. அதனால், தான் சேர்த்து வைத்திருந்த 50 ஆயிரம் வெள்ளியைத் தன் நம்பிக்கைக்குரிய மகன் செந்திலிடம் கொடுத்துவிட்டுச் சென்றார். பணம் திருட்டுப் போகாமல் இருக்க என்ன செய்யலாம் என்று செந்தில் யோசித்தான்.அவனுக்கு ஓர் அருமையான யோசனை வந்தது.அவன் பணத்தைப் பத்திரமாக இரும்புப் பெட்டியில் பூட்டி வைத்தான். இதைத் தூரத்திலிருந்து வேலவன் கவனித்து விட்டான்.செந்தில் தூங்கும் போது அவனுக்குத் தெரியாமல் சாவியை எடுத்துப் பணத்தைத் திருடிக்கொண்டு போய் மூன்று மைல் தூரத்தில் இருக்கும் ஓர் அடர்ந்த மரத்தடியில் புதைத்து வைத்து விட்டான்.

மறுநாள், கிருஷ்ணன் ஊரிலிருந்து வந்து தன் மகனிடம் பணத்தைக் கேட்டார். செந்தில் நேராகப் போய் இரும்புப்பெட்டியைத் திறந்தான். அதில் பணம் இல்லை.மெல்ல மெல்ல அவனுக்கு விஷயம் புரிந்து விட்டது. உடனே தந்தையிடம் வந்து விஷயத்தைச் சொன்னான்.

வேலவன் வீட்டுக்குள் நுழையும்போது அவன் காதில் விழும்படி செந்திலிடம் அவன் தந்தை, "நான் கொடுத்த 50 ஆயிரம் வெள்ளியை ஒரு காசு கூட குறையாமல் அப்படியே திருப்பித் தந்து விட்டாயே! நன்றி," என்றார்.

இதைக் கேட்ட வேலவனுக்குக் குழப்பமும் சந்தேகமும் கிளம்பிவிட்டது. புதைத்த பணம் கால் முளைத்து நடக்குமா? உடனே குடுகுடுவென்று அந்த அடர்ந்த மரத்தடிக்கு ஓடிச் சென்றான். புதைத்து வைத்த பணப்பையைத் திறந்து பார்த்தான். பணம் அப்படியே இருந்தது. குழப்பத்தோடு எழுந்தான். எதிரே அவன் தந்தையும், அண்ணனும் வந்து நின்றனர். ``வேலவா! சொந்த வீட்டிலேயே திருடுகிறாயே! நான் உனக்கும் உன் அண்ணனுக்கும் அந்தப் பணத்தில் பாதிப் பாதித் தரலாம் என்று நினைத்திருந்தேன். நீ செய்த காரியத்தால் மனம் உடைந்துவிட்டேன். இனி உனக்குப் பணம் கொடுக்க மாட்டேன். எல்லாம் உன் அண்ணனுக்குத்தான்!`` என்றார் தந்தை. வேலவன் தன் தவற்றை உணர்ந்து வெட்கித் தலை குனிந்தான்.

(அடுத்த பக்கம் பார்க்க)



65

www.testpapersfree.com

36 முதல் 41 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 ம.)

36. இரு மகன்களும் குணத்தால் எவ்வாறு வேறுபட்டிருந்தனர்? (3 ம.)

37. செந்தில் ஏன் பணத்தை இரும்புப் பெட்டியில் பூட்டி வைத்தான்? (3 ம.)

38. வேலவன் செய்த சூழ்ச்சி என்ன ? (4 ம.)

39) செந்திலும் அவன் தந்தையும் என்ன திட்டம் தீட்டினர்? (3 ம)

66

www.testpapersfree.com

40. வேலவன் குழம்பக் காரணம் என்ன? (3 ம.)

41. வேலவன் செய்த தவற்றால் அவனுக்கு என்ன தண்டனை கிடைத்தது? ( 4 ம.)



www.testpapersfree.com

CA 1

P -5 தேர்வுத்தாள் -- 4

ஒரு சமயம் முல்லா ...

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1)2 | 2)1 | 3) 4 | 4) 3 | 5) 2 | 6) 2 |
| 7) 2 | 8) 1 | 9) 4 | 10) 3 | 11) 3 | 12) 2 |
| 13) 2 | 14) 4 | 15) 3 | 16) 4 | 17) 4 | 18)1 |
| 19) 3 | 20) 3 | 21) 3 | 22) 1 | 23) 3 | 24) 3 |
| 25) 5 | 26) 6 | 27) 7 | 28) 2 | 29) 3 | 30) 8 |
| 31) 6 | 32)10 | 33)1 | 34) 12 | 35) 5 | |

36) பெரியவன் செந்தில் நேர்மையும் அடக்கமும் நிறைந்தவன்.இளையவன் வேலவன் மூர்க்க குணமும் ஏமாற்றுப் புத்தியும் நிறைந்தவன். இவ்வாறு இரு மகன்களும் குணத்தால் வேறுபட்டிருந்தனர்.

37)செந்தில் பணம் திருட்டுப் போகாமல் இருக்கவே அதை பத்திரமாக இரும்புப் பெட்டியில் பூட்டி வைத்தான்.

38)வேலவன் அண்ணனுக்குத் தெரியாமல் அண்ணன் பூட்டிய இரும்புப் பெட்டியில் உள்ள பணத்தை திருடிக்கொண்டு போய் மூன்று மைல் தூரத்தில் இருக்கும் ஓர் அடர்ந்த மரத்தடியில் புதைக்க சூழ்ச்சி செய்தான்.

39) செந்திலும் அவன் தந்தையும் பணம் திருட்டுப் போனது போல் காட்டிக் கொள்ளாமல் உரையாடிப் பணத்தைக் கண்டு பிடிக்க திட்டம் தீட்டினர்.

40) செந்திலின் தந்தை செந்திலிடம் தான் கொடுத்து வைத்திருந்த பணத்தை ஒரு காசு கூட குறையாமல் பாதுகாப்பாகத் திருப்பித் தந்ததைப் பற்றி உரையாடிக் கொண்டிருந்தார். அதைக் கேட்ட வேலவன் தான் திருடிய பணம் எப்படி அவர்கள் கைக்கு கிடைத்தது என்று எண்ணியதே அவன் குழம்பக் காரணம் ஆகும்.

41) வேலவனின் தந்தை அவனுக்கு பணத்தில் பாதிப் பணத்தைத் தர எண்ணியிருந்தார்.ஆனால் அவன் செய்த தவற்றுக்கு தண்டனையாக அவர் வேலனுக்குப் பணம் கொடுக்கவில்லை.

68

www.testpapersfree.com

P5

CA- 1

P -5 தேர்வுத்தாள்-- 3

ஆப்ரஹாம் லிங்கன் ...

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) 3 | 2) 1 | 3) 4 | 4) 3 | 5)1 | 6) 1 |
| 7) 1 | 8) 4 | 9) 4 | 10) 1 | 11) 4 | 12)3 |
| 13)3 | 14)4 | 15)4 | 16)1 | 17)2 | 18) 3 |
| 19)1 | 20)4 | 21)4 | 22)1 | 23)2 | 24) 8 |
| 25) 5 | 26)9 | 27) 1 | 28)3 | 29)12 | 30)6 |
| 31)10 | 32)8 | 33)5 | 34) 3 | 35) 11 | |

36. முத்து சிறு வயதில் பள்ளிக்குச் சரி வர போகவில்லை. அதனால் அவன் கல்வி கற்காததால் அவ்வூரில் யாரும் அவனுக்கு வேலை தர முன்வரவில்லை.

37.முத்து காட்டிற்குச் சென்று சரியான இடமாகத் தேர்ந்தெடுத்து வலையை விரித்து அதில் சிக்கிக் கொள்ளும் கிளிகளைப் பிடித்து அவற்றைச் சந்தையில் விற்றுப் பணம் ஈட்டினான்.

38 . முத்து வளமாக வாழ்வதைப் பார்த்த அவனது பக்கத்து வீட்டுக்காரன் பொறாமையடைந்து அவனுக்குத் துன்பம் விளைவிக்கத் திட்டம் தீட்டினான். தான் பேசுவது போல பேசும்படி ஒரு கிளியைப் பழக்கி வேடன் எங்கு சென்று வலையை விரித்தாலும் அருகில் உள்ள மரத்தில் அமருமாறு கற்றுக் கொடுத்ததன் மூலம் அவன் தீய எண்ணம் உடையவன் என்பதை நாம் அறியலாம்

39. கிளி, வேடன் காட்டில் விரித்து வைத்த வலையின் அருகில் உள்ள மரத்தில் அமர்ந்து அங்கு வரும் பறவைகளிடம் வேடன் அங்கே வலையை விரித்துள்ளதாகவும், அதில் தானியங்கள் கிடப்பதாகவும், கீழே இறங்கி தானியங்களை உண்ண வேண்டாம் என்றும் உரக்கக கத்தி முத்துவின் வேலைக்கு இடையூறு விளைவித்தது.

40) பிரச்சனைக்குத் தீர்வு காணத் தெரியாமல் குழம்பிப் போயிருந்த முத்துவுக்கு ஆறுதல் கூறி, கிளி யாரோ சொல்லிக் கொடுத்ததை அப்படியே பேசுவதாகக் கூறி மறுநாள் வழக்கம் போல் வலையை விரித்து தானியங்களைத் தூவி மறைந்திருந்து நடப்பதைப் பார்க்கச் சொன்னதன் மூலம் முத்துவில் மனைவி கெட்டிக்காரி என்பதை நாம் அறியலாம்.

41) கிளி வழக்கம் போல் கத்தி விட்டு வலையில் கிடந்த தானியங்களை சாப்பிட கீழே இறங்கி அதில் சிக்கிக் கொண்டது.இச்செயலே கிளி பொருள் உணராமல் பேசியது என்பதை உணர்த்துகிறது.



www.testpapersfree.com